**சுருக்கம்**

ஆதிதிராவிடர் நலம் – கல்வி – விடுதிகள் – 76 ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதிகளுக்கு சலவை இயந்திரம் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந4) துறை**

அரசாணை (நிலை) எண்.75 நாள்.15.10.2013.
விஜய புரட்டாசித் திங்கள் 29 ஆம் நாள்.
திருவள்ளுவர் ஆண்டு 2044.

படிக்கப்பட்டது.

ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கடித எண்.த1/22456/2012, நாள்.28.5.2013.

•••••••

**ஆணை:-**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110-ன் கீழ் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கீழ்க்கண்ட அறிக்கையினை வெளியிட்டார்.

"தமிழ் நாட்டில் உள்ள 76 ஆதிதிராவிடர் நல மாணவியர் கல்லூரி விடுதிகளில் தங்கி பயிலும் மாணவியர் தங்கள் உடைகளை துவைப்பதற்காக அன்றாடம் அதிக நேரம் செலவிடுகின்றனர் என்பதனைக் கருத்தில் கொண்டு இவர்கள் கல்வியில் தங்களது கவனத்தை முழுமையாக செலுத்தும் வகையில், இவ்விடுதிகளுக்கு துணிகளை துவைப்பதற்கு சலவை இயந்திரங்கள் வழங்கப்படும்"

2. மேற்கண்ட அறிவிக்கையின் அடிப்படையில் ஆதிதிராவிடர் நல இயக்குநர் அவர்களிடம் விரிவான செயற்குறிப்பு பெறப்பட்டது. அதன்படி ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் 402 பள்ளி மாணவியர் விடுதிகளும், 62 கல்லூரி மாணவியர் விடுதிகளும், 2 ஐ.டி.ஐ. மாணவியர் விடுதிகளும், 1 பாலிடெக்னிக் மாணவியர் விடுதியும், 4 முதுகலை பட்டதாரி கல்லூரி மாணவியர் விடுதிகளும் இயங்கி வருகின்றன எனவும், அவ்விடுதிகளில் 30888 மாணவியர்கள் தங்கி கல்வி பயின்று வருகின்றனர் எனவும், மேலும் ஆதிதிராவிடர் நல கல்லூரி மாணவியர் விடுதியும், மாணவியர்கள் கல்வி கற்கும் கல்லூரியும் தொலைவில் உள்ளதால் அவர்கள் அதிக தூரம் பயணம் செய்ய வேண்டியுள்ளது எனவும் அதனால் அவர்களுக்கு துணி துவைக்க போதிய நேரம் கிடைப்பதில்லை எனவும் துணி துவைக்கும் பணிகளில் நேரம் வீணாவதால், மாணவியர் படிப்பு மற்றும் ஓய்வு நேரத்தை பயனுள்ள வகையில் பயன்படுத்த முடியவில்லை எனவும், மழைக்காலங்களில் துணி துவைக்கும் பணி சிரமமாக அமையும் எனவும், 14 வயதிற்கு மேம்பட்ட மாணவியர்கள் சுகாதாரமான முறையில் உடை அணிவது மிகவும் அவசியம் எனவும் ஆதிதிராவிடர் நல இயக்குநர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

3. மேலும் இயக்குநர், ஆதிதிராவிடர் நலன் அவர்கள் தம்முடைய செயற்குறிப்பில் ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கும் 4 முதுகலை பட்டதாரி மாணவியர் கல்லூரி விடுதிகளுக்கும், 62 கல்லூரி மாணவியர் விடுதிகளுக்கும், 1 பாலிடெக்னிக் மாணவியர் விடுதிக்கும் மற்றும் 7 பள்ளி மாணவியர் விடுதிகளுக்கும் 2 ஐ.டி.ஐ. மாணவியர் விடுதிகளுக்கும், ஆக மொத்தம் 76 ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதிகளுக்கு சலவை இயந்திரங்களை 2013-14 –ம் ஆண்டில் முதற்கட்டமாக வாங்கி வழங்கலாம் என்றும், அந்த வகையில் ஒரு விடுதிக்கு ஒரு சலவை இயந்திரம் வாங்க ரூ.3,80,000/– என்ற விலையில் 76 மாணவியர் விடுதிகளுக்கு சலவை இயந்திரம் வாங்கி வழங்க (3,80,000 X 76 = ரூ.2,88,80,000) ரூ.2,88,80,000/– (ரூபாய் இரண்டு கோடியே எண்பத்தெட்டு இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) செலவினம் ஏற்படும் எனவும், மேற்கண்ட சலவை இயந்திரங்களை திறந்த ஒப்பந்தப் புள்ளி முறையில் (Central Open Tender System) வாங்கி வழங்கலாம் எனவும், இத்தொகையினை 2013–14 –ம் நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யுமாறு இயக்குநர், ஆதிதிராவிடர் நலம் அவர்கள் அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

4. ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து இத்துறையின் கீழ் இயங்கும் 4 முதுகலை பட்டதாரி மாணவியர் கல்லூரி விடுதிகள், 62 கல்லூரி மாணவியர் விடுதிகள், 1 பாலிடெக்னிக் மாணவியர் விடுதி, 7 பள்ளி மாணவியர் விடுதிகள் மற்றும் 2 ஐ.டி.ஐ. மாணவியர் விடுதிகள் ஆக மொத்தம் 76 ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதிகளுக்கு விடுதி ஒன்றுக்கு ரூ.3,80,000/– செலவில் ஒரு சலவை இயந்திரம் வீதம், இவ்வாணையின் இணைப்பில் கண்டுள்ள 76 ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதிகளுக்கு சலவை இயந்திரம் வாங்கி வழங்கவும், இச்செலவினத்திற்கு ரூ.2,88,80,000/–(ரூபாய் இரண்டு கோடியே எண்பத்தெட்டு இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) கீழ் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு நிதி ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

(i) இத்திட்டத்திற்கென வாங்கப்பட வேண்டிய சலவை இயந்திரங்களை திறந்த ஒப்பந்தப் புள்ளி முறையில் (Central Open Tender System) வாங்கப்படவேண்டும்.

(ii) இத்திட்டத்திற்கென ஒப்பளிக்கப்பட்ட தொகையில் செலவினம் போக மீதம் இருப்பின் அத்தொகையினை அரசு கணக்கில் ஒப்படைப்பு செய்தல் வேண்டும்.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

| கணக்கு தலைப்பு | மாணவியர் விடுதிகள் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 2225–ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 01 ஆதிதிராவிடர் நலன் – 277 கல்வி – 1 –திட்டத்தில் சேராதது – AE மாணவர் இல்லங்கள் – 19 இயந்திரமும் சாதனமும்–01– வாங்குதல் (து.தொ.கு எண்.2225 01 277 AE 1911) | 34 X ரூ.3,80,000 | ரூ.1,29,20,000/– |

| | | |
|---|---|---|
| 2225–ஆதிதிராவிடர்,பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் –01 ஆதிதிராவிடர் நலன்–277 கல்வி – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் –II– மாநில திட்டம் KD-மாணவரில்லங்கள்–19 இயந்திரமும் சாதனமும்–01 வாங்குதல் (த.தொ.கு.எண்.2225 01 277 KD 1913) | 38 X ரூ.3,80,000 | ரூ.1,44,40,000/– |
| 2225–ஆதிதிராவிடர்,பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்–01 ஆதிதிராவிடர் நலன்–277–கல்வி பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்–II மாநிலத்திட்டம் KE ஆதிதிராவிடர் நல பட்ட மேற்படிப்பு மாணவர் இல்லத்தை தொடங்குதல்–19– இயந்திரமும் சாதனமும் 01 வாங்குதல் (த.தொ.கு.எண்.2225 01 277 KE 1911) | 4 X ரூ.3,80,000 | ரூ.15,20,000/– |
| மொத்தம் | 76 X ரூ.3,80,000 | ரூ.2,88,80,000/– |

6. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு புது துணைப் பணி குறித்த (New Instrument of Service ) செலவினமாகும். இச்செலவினத்திற்கு நாளடைவில் சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி முதற்கண் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து இச்செலவினம் மேற்கொள்ளப்படும். இதற்கான முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வரவு–செலவு பொது–I) துறையால் தனியே வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து செலவு செய்ய தேவையான தொகைக்கு செயற்குறிப்பினை உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வரவு–செலவு பொது I) துறைக்கு விண்ணப்பிக்கும்படி ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும் இச்செலவினம் மீது சட்டப்பேரவையின் ஒப்புதல் பெறும் பொருட்டு 2013–2014 –ஆம் ஆண்டின் துணை மதிப்பீடுகளில் சேர்க்க ஏதுவாக துணை மானிய குறிப்பு ஒன்றினை உரிய நேரத்தில் நிதி(ஆதிந)துறைக்கு அனுப்பிவைக்குமாறும் இயக்குநர், ஆதிதிராவிடர் நலன் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையை இயக்குநர், ஆதிதிராவிடர் நலன் பெற்று, பத்தி–4 –ல் தெரிவித்துள்ள நிபந்தனைகள் மற்றும் நடைமுறையில் உள்ள விதிமுறைகளை பின்பற்றி சலவை இயந்திரங்களை வாங்கி சம்மந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள் மூலமாக அவற்றை பகிர்ந்தளிக்க அதிகாரம் அளிக்கப்படுகிறது.

8. மேலே பத்தி 4–ல் குறிப்பிட்டுள்ள 76 சலவை இயந்திரங்களை வாங்கி வழங்கப்பட்ட பின்னர் உரிய அறிக்கையை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

9. இவ்வாணை நிதித்துறையின் இசைவினை அதன் அ.ச.கு.எண். 49884 நிதி(ஆதி(ம)பந)/2013, நாள்.18.9.2013 –ல் பெற்று வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதி ஒதுக்க பேரேடு எண். 1217(ஆயிரத்து இருநூற்று பதினேழு) உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கண்ணகி பாக்கியநாதன்
அரசு செயலாளர்.

பெறுநர்:–
இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை–5.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை–5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–5.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–1,5,6,8,35.
முதன்மை கணக்காயர் (G & SSA), சென்னை–18.
மாநில கணக்காயர், சென்னை–35/6/18.

நகல்:–
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
அமைச்சர் (ஆதி(ம)பந) அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
ஆதி (ம)பந துறை செயலர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
ஆதி(ம)பந (ஆதிந–2/ ப.மே–2/ஆதிந 7– பிரிவு), துறை, சென்னை–9.
நிதி(ஆதி(ம)பந/வ.செ.பொ–I /வ.செ.பொ–II)துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உபரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்
15.10.13

# இணைப்பு

அரசாணை (நிலை) எண். 75 ஆதி(ம)பந (ஆதிந4) துறை, நாள்.15.10.2013.

| வ.எண். | மாவட்டம் | இடம் | விடுதி |
|---|---|---|---|
| 1 | சென்னை | இராயபுரம் | கல்லூரி |
| 2. | சென்னை | இராயபுரம் | கல்லூரி , இணைப்பு–I |
| 3 | சென்னை | இராயபுரம் | கல்லூரி, இணைப்பு–II |
| 4 | சென்னை | இராயபுரம் | முதுகலை கல்லூரி |
| 5 | சென்னை | இராயபுரம் | கல்லூரி, இணைப்பு–III |
| 6 | கோயம்புத்தூர் | பொள்ளாச்சி | கல்லூரி |
| 7 | கோயம்புத்தூர் | சிங்காநல்லூர் | கல்லூரி |
| 8 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர்–புளியகுளம் | கல்லூரி |
| 9 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் – புதியது | கல்லூரி |
| 10 | கோயம்புத்தூர் | வால்பாறை | கல்லூரி |
| 11 | கடலூர் | கடலூர் | கல்லூரி |
| 12 | கடலூர் | சிதம்பரம் | கல்லூரி |
| 13 | கடலூர் | கடலூர்(புதியது) | கல்லூரி |
| 14 | தர்மபுரி | தர்மபுரி – மெயின் | கல்லூரி |
| 15 | தர்மபுரி | தர்மபுரி – கூடுதல் | கல்லூரி |
| 16 | திண்டுக்கல் | திண்டுக்கல் | கல்லூரி |
| 17 | ஈரோடு | ஈரோடு | கல்லூரி |
| 18 | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் | கல்லூரி |
| 19 | கன்னியாகுமரி | அருள்நகர் | கல்லூரி |
| 20 | கரூர் | தான்தோன்றி மலை | கல்லூரி |
| 21 | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி | கல்லூரி |
| 22 | மதுரை | முன்னுமாவடி | கல்லூரி |
| 23 | மதுரை | சொக்கிக் குளம் | கல்லூரி |
| 24 | மதுரை | மேலூர் | கல்லூரி |
| 25 | மதுரை | மதுரை | பாலிடெக்னிக் |
| 26 | நாகப்பட்டினம் | மயிலாடுதுறை | கல்லூரி |
| 27 | நாமக்கல் | நாமக்கல் | கல்லூரி |
| 28 | நாமக்கல் | நாமக்கல் | முதுகலை கல்லூரி |
| 29 | நீலகிரி | ஊட்டி | கல்லூரி |
| 30 | பெரம்பலூர் | பெரம்பலூர் | கல்லூரி |
| 31 | புதுக்கோட்டை | புதுக்கோட்டை | கல்லூரி – I |
| 32 | புதுக்கோட்டை | புதுக்கோட்டை | கல்லூரி – II |
| 33 | இராமநாதபுரம் | இராமநாதபுரம் | கல்லூரி |
| 34 | இராமநாதபுரம் | பரமக்குடி | கல்லூரி |
| 35 | சேலம் | தலைவாசல் | கல்லூரி |
| 36 | சேலம் | சேலம் மணக்காடு | கல்லூரி |
| 37 | சேலம் | சேலம் | கல்லூரி |

| | | | |
|---|---|---|---|
| 38 | சிவகங்கை | சிவகங்கை | கல்லூரி |
| 39 | சிவகங்கை | சிவகங்கை | கல்லூரி |
| 40 | சிவகங்கை | காரைக்குடி | கல்லூரி |
| 41 | சிவகங்கை | காரைக்குடி(புதியது) | கல்லூரி |
| 42 | தஞ்சாவூர் | கும்பகோணம் | கல்லூரி |
| 43 | தஞ்சாவூர் | தஞ்சாவூர் | கல்லூரி |
| 44 | தேனி | தேனி | கல்லூரி |
| 45 | தேனி | பெரியகுளம் | கல்லூரி |
| 46 | தேனி | ஆண்டிப்பட்டி | கல்லூரி |
| 47 | திருப்பூர் | திருப்பூர் | கல்லூரி |
| 48 | திருப்பூர் | உடுமலைப்பேட்டை | கல்லூரி |
| 49 | திருவள்ளூர் | திருத்தணி | கல்லூரி |
| 50 | திருவள்ளூர் | பொன்னேரி | கல்லூரி |
| 51 | திருவாரூர் | திருவாரூர் | கல்லூரி |
| 52 | திருவாரூர் | மன்னார்குடி | கல்லூரி |
| 53 | தூத்துக்குடி | தூத்துக்குடி | கல்லூரி |
| 54 | திருச்சி | திருச்சி-கண்டோன்மென்ட் | கல்லூரி |
| 55 | திருச்சி | முசிறி | கல்லூரி |
| 56 | திருச்சி | திருச்சி – திம்மராயபுரம் | கல்லூரி |
| 57 | திருநெல்வேலி | திருநெல்வேலி | கல்லூரி |
| 58 | திருநெல்வேலி | குற்றாலம் | கல்லூரி |
| 59 | திருநெல்வேலி | பாளையங்கோட்டை | கல்லூரி |
| 60 | திருவண்ணாமலை | திருவண்ணாமலை | கல்லூரி |
| 61 | வேலூர் | வாலாஜா | கல்லூரி |
| 62 | வேலூர் | ஆற்காடு (புதியது) | கல்லூரி |
| 63 | வேலூர் | வேலூர் | முதுகலை கல்லூரி |
| 64 | விழுப்புரம் | விழுப்புரம் | கல்லூரி |
| 65 | விழுப்புரம் | திண்டிவனம் | கல்லூரி |
| 66 | விருதுநகர் | விருதுநகர் | கல்லூரி |
| 67 | விருதுநகர் | சாத்தூர் | கல்லூரி |
| 68 | சென்னை | இராயபுரம் | ஐ.டி.ஐ. |
| 69 | கடலூர் | கடலூர் | ஐ.டி.ஐ. |
| 70 | கடலூர் | சிதம்பரம் | பள்ளி |
| 71 | கடலூர் | சேப்பாக்கம் | பள்ளி |
| 72 | மதுரை | சொக்கிக்குளம் | பள்ளி |
| 73 | நாமக்கல் | வளையாப்பட்டி | பள்ளி |
| 74 | பெரம்பலூர் | பெரம்பலூர் | பள்ளி |
| 75 | இராமநாதபுரம் | பரமக்குடி | பள்ளி |
| 76 | திருச்சி | திருச்சி | பள்ளி |

//உண்மை நகல்//

சு. விஜயபால்சரன்
பிரிவு அலுவலர்

15.10.13